## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (14)

# உள்ளம் உலைக்களம்; உறுதி போர்க் கருவி!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

ரூசோ எழுதிக் குவித்தது ஏராளம் என்ற போதிலும், சுதந்திரத்தைப் பற்றி அவர் அதிகமாகவே குறிப்பிட்டுள்ளார். சுதந்திரத்தைப் பற்றி கூறும்போது, "நான் சுதந்திரத்தை வழிபடுபவன். கட்டுப்பாட்டையும், சங்கடத்தையும், பிறரைச் சார்ந்திருத்தலையும் அடியோடு வெறுப்பவன். அமைதி நிறைந்த அடிமைத்தனத்தைவிட ஆபத்துடன் கூடிய சுதந்திரமே மேலானது. மனிதன் சுதந்திரத்தோடுதான் பிறக்கிறான். ஆனால் எங்கு நோக்கினும், அவன் அடிமைத்தளைகளில் பிணைக்கப்பட்டே காட்சி அளிக்கிறான். சுதந்திரத்தைப் புதியதாகச் சம்பாதித்துக் கொள்ளலாம். ஆனால் இழந்த சுதந்திரத்தை மீட்பது அரிது. தன்னால் இயன்றதைச் செய்ய வேண்டி முயல்பவனும், தன் மனச்சாட்சியின் பிரகாரம் காரியங்களை செய்பவனுமே உண்மையான சுதந்திர மனிதன் ஆவான். தன் சுதந்திரத்தை உறுதிப்படுத்திக் கொண்டாலும், தன் பிள்ளைகளின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் உரிமை மனிதனுக்குக் கிடையாது. ஒரு மனிதன் தனது சுதந்திரத்தை இழந்து விட்டான் என்று சொன்னால், அவன் தனது மனிதத் தன்மையையே இழந்து விட்டான் என்றுதான் அர்த்தமாகும். மனித சமுதாயத்தின் அங்கத்தினன் என்ற முறையில் அவனுக்குள்ள உரிமைகளையும் கடமைகளையும் கூட அவன் இழந்தவனாகிறான்.

உண்மையான சுதந்திரத்தை அனுபவித்து வாழும் மனித சமுதாயத்திலே மனிதர்கள் தங்கள் தேக உழைப்பிலே வாழ்வார்கள். சுதந்திரம் என்ற பழச்செடி எல்லாவிதமான சீதோஷ்ண நிலைகளிலும் வளருவதில்லை. இதனால் எல்லா மக்களினங்களாலும் சுதந்திரத்தை அடைந்து விட முடியாது."

நான் முதலில் குறிப்பிட்டது போலவே வால்டேர், ரூசோ ஆகிய இருவருமே ஒருகாலத்து சிந்தனையாளர்கள் என்றபோதிலும், கருத்து ரீதியாக இருவருக்குமிடையே ஒரு பனிப் போராட்டம் இருந்து கொண்டுதான் வந்தது. வால்டேர் விவேகம், பகுத்தறிவு ஆகியவற்றை மூலதனமாகக் கொண்டு, சொற்களாலும், எழுத்துக்களாலும் மக்களைச் சீர்திருத்தி விடலாம் என்று நம்பினார். ஆனால் ரூசோவோ, வார்த்தைகளைக் கொண்டு மட்டும் எழுத்துகளாலும், பேச்சுகளாலும் எதுவும் செய்து விட முடியாது, நடத்தை ஒன்றின் மூலமாகத்தான் எதிலும் வெற்றி பெற இயலும் என்று திட்டவட்டமாக நம்பினார், கூறினார்.

ரூசோ எழுதிய "சமுதாய ஒப்பந்தம்" என்ற நூல், "சட்டங்களை தூக்கிப் போடு, மனிதனுக்கு சுதந்திரமான சமுதாய வாழ்வு கிடைக்கும்" என்பதை வலியுறுத்துகிறது. ஆனால், வால்டேருக்கு சமுதாயப் புரட்சி என்பது பிடிக்காத ஒன்று. என்றாலும், வால்டேர் விட்ட இடத்திலிருந்து ரூஸோ தொடங்கினார் என்ற பழமொழியை உலகம் தொடர்ந்து சொல்லி வருகிறது. இந்த "சமுதாய ஒப்பந்தம்" என்ற ரூசோவின் புத்தகத்தைப் படித்து விட்டு வால்டேர் கருத்து கூறும்போது, "மனிதனுக்கும் குரங்குக்கும் உள்ள ஒற்றுமைதான் ரூசோவிற்கும், தத்துவ ஞானிக்கும் இடையே இருக்கிறது என்று இப்போதாவது தெரிகிறதா?" என்று கேலியாகக் கூறினாராம்.

ரூசோ எழுதிய மற்றொரு நூல் – "ஏற்றத் தாழ்வு பேதங்களின் மூலத்தைப் பற்றிய ஆராய்ச்சி" என்பதாகும். இந்த நூலை எழுதி முடித்ததும், அதனை வால்டேருக்கு அனுப்பி வைக்க ரூசோ தவறவில்லை. அந்த நூலில் மக்கள் அன்றாட வாழ்க்கையில் பின்பற்றி வரும் நாகரீக வளர்ச்சிகளை வன்மையாகக் கண்டித்ததோடு, மக்கள் அனைவரும் பழங்கால மக்களைப் போலவும், விலங்குகளைப் போலவும் கட்டுப்பாடுகள் அற்ற நிலைக்குச் சென்றிட வேண்டுமென்றும் எழுதியிருந்தார். இந்த நூலைப் படித்து விட்டு வால்டேர் தன் கருத்தை ரூசோவுக்குத் தெரிவிக்கும்போது, "மனித இனத்திற்கு விரோதமாக நீங்கள் எழுதிய புதிய புத்தகம் கிடைத்தது. நன்றி. மக்களையெல்லாம் மாக்களாக மாற்றுகின்ற முயற்சியிலே உங்களைப் போல வேறு யாரும் இந்த அளவிற்கு அறிவுத் திறன் வாய்ந்தவர்களாக இருந்ததில்லை. உங்கள் நூலைப் படித்தபோது, நான்கு கால்களின் உதவியால் நடக்க மாட்டோமா என்று நினைத்தேன். அந்தப் பழக்கத்தை விட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. எனவே துரதிருஷ்டவசமாக அதனை என்னால் இப்போது பின்பற்ற இயலாது" என்று எழுதினாராம்.

ரூசோவின் எழுத்துக்களை வால்டேர் இவ்வாறு விமர்சித்தபோதிலும், ஏராளமான உலக அறிஞர்கள் பாராட்டியே கருத்து தெரிவித்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றே ஒன்றை மட்டும் கூறவேண்டுமேயானால், அண்ணல் காந்தி அடிகளால் பாராட்டப்பட்ட ரஷ்ய மேதை டால்ஸ்டாய், ரூசோவின் எழுத்துக்களைப் படித்து விட்டு, இளம் வயதிலேயே அவரது உண்மையான பக்தனாகவே மாறி விட்டதாகவும், ரூசோவின் உருவம் பதித்த பதக்கம் ஒன்றினை அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்ததாகவும், ரூசோவின் எழுத்துக்களைப் படிக்கும்போது, தானே அவற்றை எழுதிய உணர்வு தனக்கு ஏற்படுவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

ரூசோ நிரந்தர வருமானமின்றி அலைந்து திரிந்த நாட்களில் ஒருமுறை, ஒரு ஓட்டலில் தங்கியிருந்தார். அந்த ஓட்டலின் உரிமையாளர் ஒரு பெண். அவருக்கு உதவிக்கென தெரஸ் என்ற இளம் வயது பெண்ணை பணியிலே அமர்த்தியிருந்தார். அந்த ஓட்டலின் அனைத்துப் பணிகளையும் தெரஸ்தான் பார்த்து வந்தார். அதன் மூலம் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டுதான் தெரஸ் தன் பெற்றோரைக் காப்பாற்றினார். தெரஸின் பணிகள் ரூசோவை பெரிதும் கவர்ந்தன. ஓட்டல் உரிமையாளரான பெண்மணியும், அந்த ஓட்டலுக்கு வரும் விருந்தினர்களும், தெரஸை வேலை வாங்கும்போது கோபிப்பதைக் கண்டு ரூசோ வருந்துகிறார். அந்த நேரத்தில் எல்லாம் ரூசோ அந்தப் பெண்ணுக்காகப் பரிந்து பேசி, ஓட்டலுக்கு வரும் பெரிய மனிதர்களின் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாவதும் உண்டு. தெரஸ் என்ற அந்த இளம் வயதுப் பெண்ணுக்கு ரூசோவின் ஆறுதல் வார்த்தைகள் மிகவும் பிடித்தது. காலப்போக்கில் இது காதலாகப் பரிணமித்து, இறுதியில் தெரஸை ரூசோ தன் வாழ்க்கைத் துணைவியாகவே ஆக்கிக் கொண்டார்.

1749ஆம் ஆண்டு பாரீஸ் நகரத்திலிருந்து ரூசோ தன் நண்பரைக் காண்பதற்காக வின்சென்னஸ் என்ற ஆறு மைல் தூரத்தில் இருந்த ஊருக்கு கையிலே காசு இல்லாத நிலையில் நடந்தே சென்று கொண்டிருந்தார். நல்ல வெயில். சோர்வடைந்த நிலையில் மர நிழல் ஒன்றில் தங்கிய ரூசோ, தன் கையில் இருந்த ஒரு பத்திரிகையைப் படித்தபோது, அதிலே டிஜான் கலைக் கழகம் சார்பில் கட்டுரைப் போட்டி ஒன்றுக்கான விளம்பரத்தைக் கண்டார். அதைப் படித்ததும் தானும் அந்தப் போட்டியிலே கலந்து கொள்வதென்று தீர்மானித்தார். வீடு திரும்பியதும் அந்தக் கட்டுரை தயாரிப்புப் பணியில் அதிக நேரம் எடுத்துக் கொண்டு, அந்த முயற்சியில் இடைவிடாது ஈடுபட்டார். மனைவி தெரஸின் தாயாரை, எழுத்து சம்பந்தப்பட்ட பணிகளுக்காக உதவியாக வைத்துக் கொண்டார். காரணம் தெரஸ்க்கு எழுதப் படிக்கத் தெரியாது.

கட்டுரைப் போட்டியில் டிஜான் கலைக் கழகம், ரூசோவின் கட்டுரையைத் தேர்ந்தெடுத்ததோடு, மிகப் பெரிய சாதனைக் கட்டுரையாக அங்கீகரித்தது. கட்டுரைக்கான பரிசும் ரூசோவிற்கு அளிக்கப்பட்டது. பல பெரிய மனிதர்களின் நட்பும், எதிர்பாராத புகழும் ரூசோவை வந்தடைந்தது. அவர் இந்தக் கட்டுரையை எழுதி பரிசு பெற்றபோது அவருடைய வயது 38 ஆகும். ரூசோவின் கட்டுரையை புத்தகமாக வெளியிடும் பணியினை அவருடைய நண்பர்களில் ஒருவரான டிடராட் என்பவர் ஏற்றுக் கொண்டார். அதற்குப் பாராட்டுகள் ஒரு பக்கம் வந்தாலும், சிலர் ரூசோவின் கட்டுரையிலே குறை கண்டுபிடிக்கத் தவறவில்லை. அதற்கெல்லாம் ரூசோ அவ்வப்போது பதில் அளித்தார்.

தவறு கண்டவர்களில் ஒருவர் மன்னர் ஸ்டானிஸ்லாஸ். அவரது கருத்துகளைக் கண்டவுடன் ரூசோ வெகு காட்டமாக அதற்குப் பதிலடி கொடுத்தார். அதைப் பார்த்த மக்கள் ரூசோ விரைவில் பாஸ்டில் சிறைக்கு அனுப்பப்படுவார் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அது நடைபெறவில்லை. மாறாக மன்னர் ஸ்டானிஸ்லாஸ் ரூசோவை பாராட்டினார். மேலும் மேலும் புகழ் ரூசோவை வந்தடைந்தது.

ரூசோவின் எழுத்துகளை அறவே வெறுத்து அஞ்சி நடுங்கிய அரசாங்கம், பாஸ்டில் சிறைச்சாலையைக் காட்டி பயமுறுத்தியது. அப்போது ரூசோ சொல்கிறார் "இன்றில்லையாயினும் இன்னொரு நாள், நாளையோ நாளை தவறினால் என்றோ ஒரு நாள் நான் உயிரோடு இருக்கும்போதோ அல்லது என் விழிகள் மூடிய பின்னரோ பாஸ்டில் சிறைச்சாலை உடைக்கப்படும்" என்றார். அதுபோலவே அவர் மறைவுக்குப் பின்னர் அந்த பாஸ்டில் சிறைச்சாலை உடைக்கப்பட்டது. குற்றவாளிகளாக அதற்குள் வைக்கப்பட்டிருந்தவர்கள் "வாழ்க ரூசோ, வாழ்க வால்டேர்" என்று முழங்கியபடி வெளியுலகம் காண வந்தார்கள். வால்டேரோ, ரூசோவோ நேரில் இருந்து மக்களைத் தூண்டி விட்டு அதன் பின்னர் அந்தப் போராட்டம் நடைபெறவில்லை. ஆனாலும் என்றைக்கோ அவர்களின் பேனா முனையினால் எழுதிக் குவிக்கப்பட்ட ஒவ்வொரு வரியும் மக்களை உந்தித் தள்ளும் மகத்தான சக்திகளாக விளங்கின.

மற்ற சிந்தனையாளர்களுக்கு ஏற்பட்ட கதியைப் போலவே, ரூசோ எழுதிய புரட்சி எழுத்துகளைக் காரணமாகக் காட்டி அரசுப் பொறுப்பில் இருந்தோர் இவரை பெர்ன் நகரத்தை விட்டே வெளியேறுமாறு ஆணை பிறப்பித்தனர். அந்த நகரத்திலே பல புரட்சியாளர்கள் இருந்தபோதிலும், தன்னை மட்டும் வெளியேற்றுவது ஏன் என்று ரூசோ கருதினார். பல ஊர்களில் சென்று தங்க ரூசோ முற்பட்ட போதிலும், ஓர் இடத்திலும் அவரை நிலையாக தங்கவிடவில்லை. இறுதியாக ஸ்பெயின் நாட்டுக்குச் சொந்தமான செயிண்ட் பியர்ஸ் தீவிலே சென்று ரூசோ தங்கினார். அங்கும் அவரால் நிம்மதியாக வாழ முடியவில்லை. அந்த நாட்டு அரசு கடிதம் கிடைத்த 24 மணி நேரத்திற்குள் ரூசோ அந்தத் தீவிலிருந்து வெளியேற வேண்டும் என்றும் அது அரசாங்க ஆணை என்றும் தெரிவித்தது. செல்வதற்கு வேறு இடம் தெரியவில்லை என்றும், அரசாங்கம் விரும்பினால் தன்னை கைது செய்து சிறையில் வைத்து விடலாம் என்றும் அரசுக்குத் தெரிவித்தார் ரூசோ. ஆனால், அரசு அவரது வேண்டுகோளை ஏற்க மறுத்து, நாட்டை விட்டு வெளியேறும்படி மீண்டும் கட்டளை பிறப்பித்தது.

இங்கிலாந்து நாட்டிற்குச் சென்றார். அங்கே வரவேற்பு கொடுத்து ஏற்றுக் கொள்ளப்பட்டார். இவரால் எழுதப்பட்ட நாடக நூலான எமிலியும், சமுதாய ஒப்பந்தம் என்ற நூலும் பிரெஞ்சு அரசினால் தடை செய்யப்பட்டு, நீதிமன்ற வாயிலிலேயே இந்த நூல்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. ஆனால் இதே நூல்களை பலபட பாராட்டிய இங்கிலாந்து மக்கள், அந்த நூல்களை எழுதிய ரூசோவின் கைகளுக்கு முத்தமிட்டுப் புகழ்ந்தனர்.

271778 அன்று, ரூசோ தான் தங்கியிருந்த அறையில் முகமெல்லாம் வீங்கிய நிலையில் பிணமாகக் கிடந்தார். அவரது மறைவுக்கு உண்மையான காரணம் என்னவென்பது உலகத்தின் கண்களுக்கு மறைக்கப்பட்டது. அவருக்கு நேர்ந்தது இயற்கை மரணமா? செயற்கையான நிலையில் கொல்லப்பட்டாரா என்ற உண்மை இறுதி வரை தெரியாமலே போய்விட்டது.

ரூசோ தான் மறைந்தவுடன் எந்த இடத்தில் தன்னை அடக்கம் செய்ய வேண்டுமென்று கூறியிருந்தாரோ, அதே இடத்தில் அவர் புதைக்கப்பட்டார்.

வால்டேருக்குச் செய்ததைப் போலவே, ரூசோ மறைந்து பதினாறு ஆண்டுகளுக்குப் பின்னர், பிரெஞ்சுப் புரட்சி உலகத்தையே குலுக்கிக் கொண்டிருந்த நேரத்தில், ரூசோவின் கல்லறை மீண்டும் தோண்டப்பட்டு, அவரது உடலை பாரீஸ் நகரத்திற்குள் ஊர்வலமாக எடுத்துச் சென்று, வழக்கமாக பெரிய பிரமுகர்கள் அடக்கம் செய்யப்படும் இடத்திலே புதைத்தார்கள். அவரது உடல் சவமாக எடுத்துவரப்பட்ட நேரத்தில் அவர் எழுதி ஒரு காலத்தில் பாரீஸ் மாநகரில் எரிக்கப்பட்ட "சமுதாய ஒப்பந்தம்" என்ற நூல், புனித நூலாகக் கருதப்பட்டு ஊர்வலத்தில் அனைத்து மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டது.

வால்டேரும், ரூசோவும் எந்த உலைக் களத்திலும் வடித்தெடுத்துக் கொடுத்த ஆயுதங்களை ஏந்தி, ஆயிரக்கணக்கில் இளைஞர்களும், வாலிபர்களும் பயங்கரமான பாஸ்டில் சிறையை உடைக்கவில்லை; அந்தச் சிங்க இளைஞர் கூட்டம், தங்கள் அஞ்சா நெஞ்சம் எனும் உலைக்களத்தில் உருவான உறுதியையே "பாஸ்டில்" சிறைச்சாலையை உடைக்கும் கருவியாகக் கொண்டு பொடிப் பொடியாக்கினர்; அந்தப் பொல்லாத சிறைக் கூடத்தை! புரட்சி என்பதற்குப் பொருள் புரியாமல் புலம்பிக் கொண்டிருந்தவர்களுக்கு அந்தப் புலி நிகர் மாந்தர் புரிய வைத்தனர், புரட்சி எப்படி வரும்? ஏன் வரும்? எப்போது வரும்? என்பதை!

**அன்புள்ள,**

**மு.க.**

(முரசொலி 21.11.2007)

## 'திராவிட மாடல்' அரசு செயல்படுத்திய

# மழைநீர் வடிகால் பணி வெற்றி கண்டது!

### கழக அரசையும், மாமன்ற உறுப்பினரையும் பாராட்டிய விருகம்பாக்கம் பெண்மணி!





சென்னை, டிச. 7–

கடந்த டிசம்பர் 3ந் தேதி இரவு முதல் டிசம்பர் 5ஆம் தேதி வரை 'மிக்ஜாம்' புயல் வரலாறு காணா வகையில் சென்னை மாநகரையே புரட்டிப் போட்டது எல்லோரும் அறிந்ததே!

எங்கும் மழை வெள்ளம்! மக்கள் அதிர்ச்சியிலும், தவிப்பிலும் இருந்த நேரம் இந்த சூறாவளியுடன் கூடிய புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புயலினும் வேகமாக கழக அரசு களப் பணியில் இறங்கியது. அமைச்சர்கள், மாநகராட்சி அலுவலர்கள், அரசு அதிகாரிகள் ஏன் முதல்வரும் இரவு பகல் பாராது செயலாற்றி அந்தப் பேரிடரிலிருந்து சென்னை மீட்கப்பட்டது.

இந்தப் புயல் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டு, அரசின் செயல்பாட்டால் தமது பகுதி பாதுகாக்கப்பட்டது குறித்து விருகம்பாக்கத்தைச் சேர்ந்த லதா ஸ்ரீதர் என்ற பெண்மணி திராவிட மாடல் அரசையும், அந்தப் பகுதி மாமன்ற உறுப்பினரையும் பாராட்டி கூறியிருப்பதாவது:–

**நான் சென்னை தெற்கு மாவட்டம் 128வது வார்டு, விருகம்பாக்கம் சாரதா நகரைச் சேர்ந்தவர். கடந்த 8 வருடங்களாக இங்கு வசித்து வருகிறேன். ஒவ்வொரு மழைக்காலமும் எங்களுக்கு மிகவும் சிரமமாக இருந்தது. இரண்டு மணி நேரம் மழை பெய்தாலும் நெஞ்சு மட்டம் வரை தண்ணீர் தேங்கி நிற்கும். நாங்கள் எந்தக் கற்களையும் விட்டு விடவில்லை, ஆனால் யாரும் கவலைப்படவில்லை. கடந்த ஆண்டு நாங்கள் எங்கள் கவுன்சிலர் ரத்னா லோகேஸ்வரன் அவர்களை அணுகி, வருகை தருமாறு கோரிக்கை வைத்தோம்.**




**ஒரு நாள் மாலை தன் படையுடன் கொட்டும் மழையில் வந்து நள்ளிரவு வரை தேநீர் கூட சாப்பிடாமல் பிரச்சினை சரியாகும் வரை இருந்தார். இப்போது சூறாவளி மற்றும் கனமழை வரும் என அறிவிக்கப்பட்ட போது, இங்கே தங்குவது குறித்து எனக்கு அச்சம் ஏற்பட்டது, எனவே அருகிலுள்ள இரண்டாவது மாடியில் உள்ள எனது மகள்களின் இடத்திற்கு மாற்றினேன். நேற்று காலை மழை நின்றதும், மழை நீர் அதிகளவு இருக்கும் என எதிர்பார்த்து எனது வீட்டிற்கு வந்தேன். ஆனால் தெருவில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லை. என்னால் நம்பமுடியவில்லை மற்றும் நான் திகைத்துப் போனேன்.**

**மழைநீர் வடிகால் உண்மையில் வேலை செய்தது. கவுன்சிலர் ரத்னா லோகேஸ்வரன் அவர்கள் காட்டும் முயற்சியும், அர்ப்பணிப்பும் உண்மையிலேயே பாராட்டுக்குரியது. என்னுடைய 59 வயதில் நான் பார்த்ததில் ரத்னா லோகேஸ்வரனைப் போல திறம்படப் பணியாற்றுபவர்கள் வெகு சிலரே. நான் கவுன்சிலரை வாழ்த்துகிறேன் ஐயா, உங்களுக்கு மேலும் பல விருதுகள் வர வாழ்த்துகிறேன். இந்த தி.மு.க. அரசால் நாங்கள் அனைவரும் நிம்மதியாக வாழ்கிறோம். மிக்க நன்றி!**

இவ்வாறு அந்தப் பெண்மணி கூறியுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ந. சண்முகம்

### டிசம்பர் 7 (2021)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தொண்டர் படையில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

பல ஆண்டுகள் தொடர்ந்து கிளைச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

திருநரையூர் ஊராட்சி மன்றத் தலைவர், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்க தலைவர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**